1970 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) வினா எழாது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பகுதி இராமநாதபுரம் மாவட்டத்தை ஒட்டி இருப்பதாலோ என்னவோ இராமநாதபுரம் மாவட்டத்தில் அடிக்கடி ஏற்படும் வரட்சி இந்தப் பகுதியில் ஏற்படுகிறது. இந்தக் காட்டாற்றில் மழை காலங்களில் அதிகமான தண்ணீர் வந்து குண்டாற்றில் கலந்து வங்காளக் கடலில் வீணே விழுகிறது. எனவே, இந்தக் காட்டாற்றின் குறுக்கே இதுவரை அணை கட்டும் திட்டம் இல்லாவிட்டாலும் இனியாவது இந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: செங்கப்படை கிராமத்தின் தெற்கே 3 மைல் தொலைவில் ஓடும் புளியம்பட்டி ஓடையை கள்ளிக்குடி கிராமம் வெள்ளாகுளத்துடன் முடியும் அரசங்குளம், செங்குளம் முதலான தொடர் இணைப்பு கண்மாய்கள் பயன் அடையும்படி திருப்பிவிடும் ஒரு திட்டம் உள்ளது. அது விரிவான அளவுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: எந்த அளவுக்கு இந்தத் திட்டம் இப்போது செயல்பட்டு வருகிறது? எப்போது முடிவடையும்? திட்டவட்டமான அறிவிப்புத் தேவை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. விரைவில் செய்யப்படும்.

* 127 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் கூற்றத்திலுள்ள வார்ப்பட்டை ஒட்டியுள்ள பிரான் மலையின் அடிவாரத்தில் அணை எழுப்பி நீரைத் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்தச் செய்யும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: வார்ப்பட்டை ஒட்டியுள்ள பிரான்மலையின் நீர்த்தேக்கத்தை உருவாக்குகிற காரணத்தால் நல்ல நீர் பாசன வசதி ஏற்படுகிறது. அதனால் அரசு இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திருமயம் வட்டம் திருப்பக்குட்டு, தொரடைக்குட்டு என்ற குன்றுகளின் இடையில் கண்மாய் எழுப்பும் திட்டமாகும். பிடிக்கும் பரப்பளவு அதில் குறைவாக இருப்பதனால் அதிகக் கொள்ளளவை எதிர்பார்க்க முடியாது. மேலும் இதனால் பயன் அடையும் நீர் கண்மாய் 4,000 அடி தொலைவில் இருப்பதால் அதை 700 அடிக்கு அருகாமையில் கொண்டுவர மலையை உடைக்க வேண்டியிருப்பதாலும் செலவு அதிகமாகும் என்கிற காரணத்தால் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வில்லை.